# 3 சமய ஒழுகலாறுகளைப் பின்பற்றுவோம்

சைவ சமயம் மனிதனை மண்ணில் நல்லவண்ணம் வாழ வழி காட்டுவதோடு, மேலாம் இறையின்பம் எனப்படும் முக்தியின்பத்திற்கும் வழி காட்டுகின்றது. ஒருவன் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என நினைக்காது எல்லோரும் வாழவேண்டும் என நினைத்து வாழ வழிகாட்டுவது சைவ சமயமாகும்.

**''எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'**

என்பது தாயுமானவர் வாக்காகும்.

அன்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு வாழ்க்கை நெறியே சைவ சமயம். அன்பே சிவமாகும் என்பது திருமூலர் திருமொழி. அன்பை மறுப்பவன் சிவத்தை மறுக்கிறான். இதனைச் சிந்திக்கும் போது நாம் எல்லோரிடமும் அன்பு வைத்து வாழ வேண்டும் என்பது புலனாகும்.

சைவசமயம் இவ்வுலகில் மனிதன் வாழ்வதற்கு அன்பு வழிபட்ட பல சமய ஒழுகலாறுகளையும், வழக்காறுகளையும் எடுத்துக் கூறுகின்றது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'. சமயம் கூறும் ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலமே மனிதன் மேம்பாடடைய முடியும்.

இந்த வகையில் நாம் தினந்தோறும் வீடுகளிலும், பாடசாலைகளிலும் செய்ய வேண்டிய நல்ல கருமங்கள் பல உள. அவை கடவுளை வழிபடுதல், பெற்றோரைப் போற்றுதல், குருவை மதித்தல், வணங்குதல் முதலானவையாம். மேலும் பெரியோருக்குக் கீழ்ப்படிதல், உண்மை பேசுதல், உயிர்களுக்கு இரங்குதல், அவற்றைப் பாதுகாத்தல், எல்லோருடனும் இணங்கி வாழ்தல், சமூக சேவைகளில் ஈடுபடுதல் என்பனவும் குறிப்பிடத்தக்க நல்ல செயல்களே. இவை விரும்பிச் செய்யப்பட வேண்டிய அறங்களாகும். **'அறம் செய விரும்பு'** என்பது ஔவை கூறும் மகாவாக்கியமாகும்.





இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

‘**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**’ என்பதும் அவரின் அமுத வாக்கு. எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கும் தாய் தந்தையர்களே எமது கண்கண்ட தெய்வங்களாகும். அவர்களின் பாதங்களை நாம் தினமும் விழுந்து வணங்க வேண்டும். பெற்றோர் மனம் மகிழ்ந்து ஆசீர்வதிப்பதால் நாம் சந்தோசமாக வாழலாம்.‘**தாயிற் சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை**’ என்பது முதுமொழி. எனவே, தாய் தந்தை சொற்களைக் கேட்டு எம் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும். பெரியோருக்கு மதிப்பளிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அதனால் அவர்களின் ஆசீர்வாதமும் கிடைக்கின்றது. பேரூந்து, புகையிரதம் போன்றவற்றில் பெரியோர் வரும் போது எழுந்து இடம் விட்டுக் கொடுத்தல் வேண்டும்.

அத்தோடு சமூகத்தில் எத்தனையோ நலிவுற்றவர்கள் வாழ்வார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை நேரமறிந்து செய்ய வேண்டும். நடக்க முடியாதவர்கள், பார்க்க முடியாதவர்கள் எனப்பலரும் இருப்பார்கள். அவர்களை மதித்து உதவ வேண்டியது எமது கடமையாகும். அவர்களுக்கு நாங்களாக முன்வந்து வேண்டிய உதவிகளைச் செய்தல் சிறந்த ஒழுக்கமாகும்.

நாம் கல்வி கற்கும் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் கடமையாற்று கின்றார்கள். அவர்களை நாம் போற்ற வேண்டும். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? சிவபெருமானே கல்வியை வழங்குவதற்காக தட்சிணா மூர்த்தியாக குரு வடிவம் தாங்கி சீடர்களுக்கு ஞான உபதேசம் செய்துள்ளார். சீடர்கள் எவ்வாறு அவரின் அடியில் கைகூப்பி பக்குவமாக இருந்து கற்கின்றார்களோ, அவ்வாறே மாணவர்களும் அதிபர்,ஆசிரியர் ஆகியோருக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் சொல்கின்ற விடயங்களைக் கிரமமாகக் கேட்டுத் தொழிற்பட்டால் வாழ்க்கையில் சிறப்படைய முடியும்.

பாடசாலையில் மட்டுமன்றி வெளியிடங்களிலும் நாம் அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களைக் கனம் பண்ணப் பழகிக் கொள்ளல் வேண்டும். இத்தகைய நல்ல பழக்க வழக்கங்கள் மாணவர்களை எப்போதும் மேன்மையடையச் செய்யும்.

தூய்மையான இடத்திலேயே நாம் வாழ வேண்டும். அவ்வாறே நாம் பயன்படுத்தும் பொருட்களையும் வீட்டையும், வீட்டுச் சூழலையும் எப்பொழுதும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். ‘சுத்தம் சுகம் தரும்’ என்பது முதுமொழி. எனவே, நாம் கல்வி கற்கும் வகுப்பறை, பாடசாலைச் சூழல் என்பவற்றையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். காலையில் எழுந்தவுடன் காலைக்கடன்களை முடித்து தோய்த்துலர்ந்த ஆடையணிந்து உடல், உடை சுத்தம் பேணும் போது பல நோய்கள் எம்மை வந்து தாக்காது. நாம் ஆரோக்கியமாக வாழலாம்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

புறத்தூய்மை உடையவர்களாக நாம் வாழும் போதுதான் எமக்கு அகத் தூய்மையும் ஏற்படும். தூய்மையான உள்ளத்திலேயே நல்ல எண்ணங்கள், உணர்வுகள், சிந்தனைகள் தோன்றும். பேச்சிலே வாய்மை, இனிமை, மென்மை, பணிவு என்பன இருத்தல் வேண்டும். அவை எல்லாவற்றுக்கும் கடவுள் நம்பிக்கை எமக்கு அவசியமாகும். தூய்மையான இடத்தில் மட்டுமன்றி தூய்மையான உள்ளத்திலுமே கடவுள் குடி கொள்வார். ''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்பது விபுலானந்தரின் வாக்கு.

கோயில் ஒரு புனிதமான இடமாகும். அது இறைவனின் அருள் நிறைந்த இடம். எனவே நாம் கோயிலைத் தூய்மையாகவும், துப்பரவாகவும் வைத்திருத்தல் வேண்டும். நீராடி தூய ஆடையணிந்து செல்வது மட்டுமன்றி பாதணிகளை உரிய இடத்தில் கழற்றி வைத்து விட்டு கை, கால் கழுவி வாய் கொப்பளித்து கோயிலுக்குள் நுழைதல் வேண்டும். பூமி வலப்பக்கம் சுழல்வதால் அதற்கேற்றவாறு சைவசமயத்தவர் தமது கருமங்கள் எல்லாவற்றையும் வலஞ்சுழியாகவே செய்வர். அதே போல ஆலய ஒழுங்கு முறைகளை இன்னதென்று அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பது ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

**'எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வதுறைவது அறிவு'**

என்பது வள்ளுவர் வாக்கு. திருக்கோவில் வழிபாட்டில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய வழிபாட்டு முறைகளைக் கடைபிடித்து வழிபடல் வேண்டும். மாறாக வழிபட்டால் பாவத்திற்குள்ளாவோம்.

கோயிலில் செய்யத்தக்கவை எவை செய்யத்தகாதவை எவை என்பதை தரம் எட்டில் கற்றுள்ளீர்கள். அவற்றை மீண்டும் படித்துப் பார்த்தல் வேண்டும். செய்யத்தக்க விடயங்களை அனுசரித்து செய்வதும், செய்யத்தகாத விடயங்களைத் தவிர்த்து நடப்பதும் மாணவர்களின் கடமை ஆகும். சமயப் பெரியோர்களால் கூறப்பட்ட சமய நடைமுறைகளையும் ஒழுகலாறுகளையும் கடைபிடிக்கும் போது இறையருள் கிடைக்கின்றது.

ஒரு ஆலயத்திற்குச் செல்லும் போது அவ்வாலயத்திற்கான விசேட ஒழுக்கங்கள் என்ன என்பதனை அறிந்து அதற்கேற்ப நாம் செயற்பட்டால் நாமும் நன்மைபெறுவதுடன் எல்லோரும் நன்மை பெறலாம். வீடுகளிலும் பாடசாலைகளிலும் சமயம் கூறும் ஒழுகலாறுகளை முறையாகப் பின்பற்றுவதுடன் ஆலய ஒழுங்குகளையும் பேணி நடக்கும் போது சிறந்த அமைதியான ஆனந்தமான வாழ்க்கை கிட்டுகின்றது.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச் சுருக்கம்

- சைவசமயம் இவ்வுலகில் மனிதன் சிறப்புடன் வாழ்வதற்கு அன்பு வழிப்பட்ட பல சமய ஒழுகலாறுகளைக் கூறுகின்றது.
- சைவசமயி தினந்தோறும் செய்ய வேண்டிய நல்ல செயல்கள் பல உள்ளன.
- அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம். அவர்களை வணங்க வேண்டும். அவர்கள் சொற்கேட்டு நடக்க வேண்டும்.
- பெரியோருக்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் எப்போதும் மதிப்பளிக்க வேண்டும்.
- இன்பமான சூழலைத் தரும் வீட்டையும், புனிதமான ஆலயத்தையும் நம்மையும் எப்போதும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.
- ஆலயத்தில் வழிபாடு செய்யும் போது ஆலய ஒழுங்கைப் பேணுவது அசியமாகும்.

## பயிற்சிகள்

**சரியாயின் சரி (√) எனவும் பிழையாயின் (✗) பிழை எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

1. நாம் எமது தாய்தந்தையரை நாள்தோறும் பணிந்து வணங்க வேண்டும். (     )
2. நாம் பெரியோர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் (     )
3. அதிபர் ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். (     )
4. நாம் நமது சூழலையும் நம்மையும் தூய்மையாகப் பேண வேண்டியதில்லை (     )
5. ஆலயங்களில் வழிபாட்டு ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பது மிக இன்றியமையாததாகும் (     )

## செயற்பாடு

- நாள்தோறும் வீட்டில் பின்பற்ற வேண்டிய சமய ஒழுக்கலாறுளை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- ஆலயத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகளை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக